# 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 44/1998)

(2003, ஜூன் 30 அன்று இருந்தவாறு)

# THE TAMIL NADU PROHIBITION OF HARASSMENT OF WOMEN ACT, 1998

**(Tamil Nadu Act No.44 of 1998)**

**(As on the 30th June, 2003)**

தமிழாக்கம்:
சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை
தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2003

# 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 44/1998)

## பிரிவுகளின் அமைப்பு


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பும் தொடக்கமும். | 1 |
| 2. | பொருள்வரையறைகள். | 1 |
| 3. | பெண்ணிற்குத் துன்பம் விளைவிப்பது தடைசெய்யப்படுதல். | 1 |
| 4. | பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலுக்கான தண்டனை. | 2 |
| 4–A | பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணம். | 2 |
| 4–B | பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் தற்கொலை. | 2 |
| 4–C | பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணத்திற்கு மற்றும் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலாலான தற்கொலைக்கு உடந்தையாயிருத்தல் குறித்த அனுமானம். | 3 |
| 5. | வளாகம் ஏதொன்றின் நிருவாகிக்குள்ள பொறுப்பு. | 3 |
| 6. | பொதுப்பணி ஊர்திப் பணியாளர்களின் கடமை. | 3 |
| 7. | உடந்தையாக இருந்ததாகக் கொள்ளப்படுதல்.. | 4 |
| 7–A | சரியீடு வழங்குவதற்கான ஆணை. | 4 |
| 8. | பிற சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப்படுதலாகாது என்பது. | 4 |
| 9. | விதிகளைச் செய்வதற்கான அதிகாரம். | 4 |
| 10. | நீக்கமும் காப்பும். | 5 |




Price Rs. 12.00

## 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு [1][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத்] தடைசெய்கின்ற சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 44/1998)

[ஆளுநரின் ஏற்பிசைவை 1998ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று பெற்று, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 1998ஆம் ஆண்டு டிசம்பர் 24 அன்று முதன்முதலாக வெளியிடப்பட்டது.]

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இடம் எதிலும் [1][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத்] தடைசெய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் நாற்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1.(1) இந்தச் சட்டம், 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு [2][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத்] தடைசெய்கின்ற சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 1998ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள்வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

[3][(a) "துன்பம் விளைவித்தல்" என்றால், பழிதூற்றுவது அல்லது ஊறு செய்வது அல்லது தொந்தரவு செய்வது அல்லது தாக்குவது அல்லது வலிமையைப் பயன்படுத்துவது உள்ளடங்கலாக, அச்சுறுத்தலை, அச்சத்தை, அவமானத்தை அல்லது தடுமாற்றத்தை விளைவிக்கிற அல்லது பெரும்பாலும் விளைவிக்கக்கூடிய ஓர் ஆடவரின் பண்பற்ற நடத்தை அல்லது செயல் எதுவும் என்று பொருள்படும். ]

மையச் சட்டம் 59/1988.

(b) "பொதுப் பணி ஊர்தி" என்பது, 1988ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (35)ஆம் கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான அதே பொருளையே கொண்டிருக்கும்.

மையச் சட்டம் XLV/1860.

(c) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள, ஆனால் பொருள்வரையறை செய்யப்படாத சொற்களும் சொற்றொடர்களும், 1860ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொகுப்புச்சட்டத்தில் அவற்றுக்கு முறையே குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருக்கம்.

[4][பெண்ணிற்குத் துன்பம் விளைவிப்பது] தடை செய்யப்படுதல்.

3. எந்த இடத்திலும் [4][பெண்ணிற்குத் துன்பம் விளைவிப்பது] தடை செய்யப்படுகிறது.

[1] 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற சட்டத்தின் (39/2002) 2ஆம் பிரிவினால் மாற்றாகஅமைக்கப்பட்டது.
[2] மேற்படி சட்டத்தின் 3ஆம் பிரிவினால் மாற்றாகஅமைக்கப்பட்டது.

[3] மேற்படி சட்டத்தின் 4ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.
[4] மேற்படி சட்டத்தின் 5ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்ப்பட்டது.

[1][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலுக் கான] தண்டனை.

[1][4. கல்வி நிலையம், கோயில் அல்லது பிற வழிபாட்டு இடம், பேருந்து நிற்கும் இடம், சாலை, இருப்பூர்தி நிலையம், திரையரங்கம், பூங்கா, கடற்கரை, திருவிழா நடக்குமிடம், பொதுப் பணி ஊர்தி அல்லது கலம், பிற இடம் எதிலும் அல்லது அதனின் எல்லைக்குட்பட்ட இடத்தில் அல்லது அதனுள் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தல் அல்லது அதில் பங்கேற்கிற அல்லது அதற்கு உடந்தையாயிருக்கிற எவரொருவரும் மூன்றாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலஅளவிற்குச் சிறைத்தண்டனையும் மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாத அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.]

பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணம்.

[2][4–A.(1) ஒரு பெண்ணின் மரணம் உடற் காயத்தினால் விளைவிக்கப்பட்டிருந்து அல்லது இயல்பான சூழ்நிலைகளின்படி அல்லாமல் ஏற்பட்டிருந்து, அவளது மரணத்திற்கு உடனடி முன்பாக பெண்ணிற்குத் துன்பம் விளைவித்த செயலுக்கு அவள் ஆட்பட்டாள் என்றோ அல்லது அவளைப் பொறுத்த அளவில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச்சட்டத்தின் 294, 354 அல்லது 509ஆம் பிரிவுகளின்படி குற்றச்செயலொன்று செய்யப்பட்டது என்றோ, காட்டப்படுமிடத்து, அத்தகைய மரணமானது பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்பட்ட மரணம் என அழைக்கப் பெறும்.

மையச் சட்டம் XLV/1860.

(2) 4ஆம் பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும் பெண்ணிற்குத் துன்பம்விளைவித்தலால் ஏற்படும் மரணத்தை எவரொருவரும் விளைவித்திருந்து, எந்தச் செயலால் அந்த மரணம் விளைவிக்கப்படுகிறதோ அந்தச் செயலானது.

(i) மரணத்தை விளைவிக்கின்ற அல்லது மரணத்தை பெரும்பாலும் விளைவிக்கக்கூடியதான உடற் காயத்தை விளைவிக்கின்ற உட்கருத்துடன் செய்யப்படுமானால், ஆயுட்காலம் வரை நீடிக்கக்கூடிய காலஅளவுக்குச் சிறைத்தண்டனை வகைகளில் ஏதாவதுவொன்றும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாத அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(ii) மரணத்தை விளைவிக்கும் அல்லது மரணத்தைப் பெரும்பாலும் விளைவிக்கக்கூடியதான உடற் காயத்தை விளைவிக்கும் உட்கருத்து எதுவுமின்றி, ஆனால் அது மரணத்தை பெரும்பாலும் விளைவிக்கும் என அறிந்தே செய்யப்படுமானால், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலஅளவுக்குச் சிறைதண்டனை வகைகளில் ஏதாவதுவொன்றும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாத அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(iii) கண்மூடித்தனமானதாகவோ, கவனக் குறைவானதாகவோ இருக்குமானால், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலஅளவுக்குச் சிறைதண்டனை வகைகளில் ஏதாவதுவொன்றும் மற்றும் இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாத அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும்

4–B.(1) பெண் எவரும் தற்கொலை செய்து கொண்டிருந்து, அவளது மரணத்திற்கு உடனடி முன்பாக, பெண்ணிற்குத் துன்பம்விளைவித்த செயலுக்கு அவள் ஆட்பட்டாள் என்றோ, அல்லது அவளைப் பொறுத்த அளவில், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 294, 354 அல்லது 509ஆம் பிரிவுகளின்படி

மையச் சட்டம் XLV/1860.

---

[1] 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம்விளைவித்தலைத் தடைசெய்கின்ற சட்டத்தின் (39/2002) 6ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

[2] மேற்படி சட்டத்தின் 7ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

தற்கொலை.

குற்றச்செயலொன்று செய்யப்பட்டது என்றோ காட்டப்படுமானால், அத்தகைய தற்கொலையானது, பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஆன தற்கொலை என அழைக்கப்பெறும் என்பதோடு, அத்தகைய நபர் அத்தற்கொலைக்கு உடந்தையாக இருந்திருப்பதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) 4ஆம் பிரிவில் என்ன அடங்கி இருந்தபோதிலும், பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் தற்கொலைக்கு உடந்தையாயிருக்கிற எவரொருவரும், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலஅளவுக்குச் சிறைத்தண்டனை வகைகளில் ஏதாவதுவொன்றும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடாத அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்;

பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணத்திற்கு மற்றும் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலாலான தற்கொலைக்கு உடந்தையாயிருத்தல் குறித்த அனுமானம்.

4–C. நபர் எவரும் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணத்தை ஒரு பெண்ணுக்கு விளைவித்தாரா அல்லது பெண்ணிற்கு துன்பம்விளைவித்தலால் ஏற்படும் அவளின் தற்கொலைக்கு உடந்தையாயிருந்தாரா என்னும் பிரச்சினை இருக்கும்போது, நீதிமன்றம் அவளது மரணத்திற்கு முன்னர் பெண்ணிற்குத் துன்பம்விளைவித்த செயலுக்கு அத்தகைய பெண் ஆட்பட்டிருந்து அல்லது அவளைப் பொறுத்த அளவில் இந்திய தண்டனைத் தொகுப்புச்சட்டத்தின் 294,354 மற்றும் 509ஆம் பிரிவுகளின்படி குற்றச்செயலொன்று செய்யப்பட்டிருந்து, அந்த நபராலோ அல்லது அவரது தூண்டுதலின் பேரிலோ, அவ்வாறு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தல் அல்லது மேற்சொன்ன குற்றச்செயல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உடற்காயம் விளைவிக்கப்பட்டது என்றும், அது அந்தப் பெண்ணின் மரணத்தையோ அல்லது நேர்விற்கேற்ப, தற்கொலையையோ விளைவித்துள்ளது என்றும் காட்டப்படும்போது, மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, அத்தகைய நபர் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றோ அல்லது நேர்விற்கேற்ப, பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலால் ஏற்படும் தற்கொலைக்கு உடந்தையாயிருந்துள்ளார் என்றோ அனுமானித்தல் வேண்டும்.]

மையச் சட்டம் XLV/1860.

வளாகம் ஏதொன்றின் நிருவாகிக்குள்ள பொறுப்பு.

5.(1) கல்வி நிலையம், திருக்கோயில், அல்லது பிற வழிப்பாட்டிடம், திரைஅரங்கு அல்லது பிற வளாகம் எதனையும் பொறுப்பில் கொண்டிருக்கிற நபரெவரும்,

(a) அவ்வளாகத்திற்குள்ளாக [1][பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத்] தடுக்க தாம் தக்கதெனக் கருதக்கூடிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(b) பாதிக்கப்பட்ட நபரொருவரால் செய்யப்பட்ட முறையீடொன்றின் பேரில், [1][பெண்ணிற்குத் துன்பம்விளைவிப்பது] குறித்து காவல் துறையினருக்குத் தகவல் கொடுத்தல் வேண்டும்.

(2) (1)ஆம் உட்பிரிவின்படி நடவடிக்கை எடுக்கத் தவறுகிற நபரெவரும் இரண்டாயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டனை விதித்து தண்டிக்கப்படுவதற்கு உள்ளாவார்.

பொதுப் பணி ஊர்திப் பணியாளர்களின் கடமை.

6.[2][(1) பொதுப் பணி ஊர்தியொன்றில் அல்லது கலமொன்றில் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலை தடுக்கும் பொருட்டு, அந்த ஊர்தியின் அல்லது கலத்தின் பணியாளர்கள் தாங்கள் பொருத்தமென நினைக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். பொதுப் பணி ஊர்தியில் பெண்ணிற்கு அத்தகைய துன்பம் கொடுக்கப்படுமிடத்து அத்தகைய ஊர்தியின் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட நபரால் செய்துகொள்ளப்படும் முறையீடொன்றின் பேரில், அத்தகைய ஊர்தியை மிக

[1] 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம்விளைவித்தலைத் தடைசெய்கின்ற சட்டத்தின் (39/2002) 8ஆம் பிரிவினால் மாற்றாகஅமைக்கப்பட்டது.
[2] மேற்படி சட்டத்தின் 9ஆம் பிரிவினால் மாற்றாகஅமைக்கப்பட்டது.

அருகிலுள்ள காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று, காவல் துறையினரிடம் தகவல் கொடுத்தல் வேண்டும்.]

(2). (1)ஆம் உட்பிரிவின்படி நடவடிக்கை எடுக்கத் தவறுகிற பணியாளர் எவரும் ஓர் ஆயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டம் விதித்து தண்டிக்கப்படுவதற்கு உள்ளாவார்.

உடந்தையாக இருந்ததாகக் கொள்ளப்படுதல்.

[1] [7.(1) 4ஆம் பிரிவின்படி அல்லது 4–A அல்லது 4–B பிரிவின்படி தண்டனை அளிக்கப்படுவதற்குரிய குற்றச்செயல் எதுவும் செய்யப்படுவதில் ஊர்தி அல்லது கலம் எதுவும் பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஊர்தியின் அல்லது கலத்தின் ஓட்டுநர், மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, 4ஆம் பிரிவின்படியான அல்லது 4–A அல்லது 4–B பிரிவின்படியான குற்றச்செயலுக்கு உடந்தையாயிருந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதோடு மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய காலஅளவிற்குச் சிறைத்தண்டனையும் ஐந்தாயிரம் ரூபாய்க்குக் குறையக்கூடாத அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.]

(2). (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள [2][ஊர்தி அல்லது கலம்] தமக்குத் தெரியாமல் [2][பெண்ணுக்குத் துன்பம்விளைவித்தலில்] பயன்படுத்தப்பட்டுள்ளதது என்று அத்தகைய [2][ஊர்தியின் அல்லது கலத்தின்] உரிமையாளர், மெய்ப்பித்தாலன்றி, அவ் [2][வூர்தி அல்லது கலம்] பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும்.

சரியீடு வழங்குவதற்கான ஆணை.

[2][7–A நீதிமன்றம், 4, 4–A, 4–B ஆகிய பிரிவுகளின்படித் தண்டனைத் தீர்ப்பு (AWARD) அளிக்கும்போது, எந்தச் செயலுக்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் அவ்வாறு தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்படுகிறாரோ, அந்தச் செயலின் காரணமாக, இழப்பு, அல்லது கேடு அல்லது இயலாமை அல்லது மனத்துயர் எதனையும் உற்றுள்ள நபருக்கு அல்லது அவருடைய சட்டமுறை வாரிசுதாரருக்கு அந்த ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய தொகையை சரியீடு என்கிற வகையில் கொடுக்குமாறு அந்தக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்கு ஆணையிடலாம்.

பிற சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப் படுதலாகாது என்பது.

8. இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அவற்றுக்குப் பாதகமாக இருத்தலாகா.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

9. (1) மாநில அரசானது இந்தச் சட்டத்தின் நோக்க்ங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்ய்ப்பட்ட விதிகளனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாகத் தெரிவிக்க்ப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்டதற்குப் பின்னர், கூடியவிரைவில் சட்டமன்றப் பேரவையில்

[1] 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம்விளைவித்தலைத் தடைசெய்கின்ற சட்டத்தின் (39/2002) 10ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

[2] மேற்படி சட்டத்தின் (39/2002) 11ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின், அல்லது அந்த விதியானது செய்யப்படுதல் கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு எடுக்குமாயின், அந்த விதியானது அதன்பின்னர், அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கே வராது போதல் வேண்டும்; எனினும், அவ்வாறு மாறுதல் செய்தது அல்லது நீக்கம் செய்தது எதுவும் அந்த விதியின்படி முன்னரே செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்குக் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 4/1998.

நீக்கமும் காப்பும்.

10.(1) 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்தல் அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்படுகிறபோதிலும், அந்த அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவும், அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.